

# நீலி அவுரி

நீர் வளமுள்ள நிலங்களில் விவசாயம் செய்யத்தக்க பயிர்கள் ஆயிரம் இருக்கின்றன. வறண்ட பூமியில் வளரும் பயிர்கள் ஒரு சிலவே. பருவமழையின் மழைத்துளிகளை மட்டுமே நம்பி, வானம்பார்த்த பூமியைத்தான் மானவாரிபூமி என்கிறோம். மானவாரி நிலங்களில் பயிரிடப்படும் மானவாரிப்பயிர்களில் ஓரளவு லாபம் தரக்கூடிய பல பயிர்களில் முக்கியமானது **"நீலி அவுரி"** ஆகும். நீலி அவுரியை மட்டுமே பிரத்தியேகமாகப் பயிர்செய்து அதன் மூலமாக ஒரு தொழிற்சாலையையே நிறுவி நிர்வகித்து வரும் திரு. அ. பாலசந்தர் அவர்களை ஸ்பிக் பண்ணைச் செய்தி சார்பாக சந்தித்தோம். பால் மணம் மாறாத இளைஞர் என்றாலும், பக்குவமாகப் பேசுவதிலும், தான் பெற்ற பரந்த அனுபவத்தைப் பகிர்வதிலும் வித்தகராக இருக்கிறார்.

"நீலி அவுரி ஒரு புதுமையான பயிர் என்று சொல்லிவிட முடியாது. இது ஒரு பண்டைகாலப் பயிராகும். இதன் மகத்துவமே, வறண்ட நிலங்களிலும் மழைத்தாழ்ச்சி உள்ள பகுதிகளிலும் வளரக்கூடிய தன்மையாகும். நீலி அவுரியிலிருந்து தானியங்களோ, காய்களோ விளைவது இல்லை. மாறாக அவற்றின் இலைகளில் உள்ள ஒருவகை நீலச்சாயம் மிகச்சிறந்த ஓர் இயற்கைச் சாயமாகும். நீலி அவுரி எந்த அளவு வறண்ட நிலத்தில் பயிரிடப்படுகிறதோ அந்த அளவிற்கு சாயத்தின் தன்மையும் தரமும் அதிகரிக்கும். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பாக, வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்தபோது இந்தச் சாயத்தின் அருமை பெருமை தெரிந்து நீலி அவுரியிலிருந்து சாயத்தைப் பிரித்தெடுக்க தமிழ்நாட்டில் தொட்டிகள்கட்டி பாடம் செய்து கிடைக்கும் நீலச்சாயத்தை இங்கிலாந்து தேசத்திற்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தனர் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி துணிகள் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு



Scanned by CamScanner

சாயம் தோய்க்கப்பட்டு மீண்டும் இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்யப்பட்டது. காந்தி சத்தியாகிரகம் செய்ததற்கு முக்கியமான காரணங்களில் இதுவும் ஒன்று என்று சொல்லப்படுகிறது."

"அவுரியில் இரண்டு இரகங்கள் உண்டு ஒன்று **சென்னா அவுரி**. இது சித்தமருத்துவத்திற்கு பயன்படுகிறது. தூத்துக்குடி, இராமநாதபுரம் போன்ற தென்மாவட்டங்களில் சென்னா அவுரி பரவலாகப் பயிர் செய்யப்படுகிறது. இரண்டாவது வகை **நீலி அவுரி** என்று சொல்லப்படுகிற டை (சாயம்) தயாரிக்கப் பயன்படும் இரகம். நீலி அவுரி பயிர் செய்ய மிகச்சிறந்த சீதோஷ்ணநிலை இந்தியாவில்தான் உள்ளது. இது திண்டிவனம் அருகிலுள்ள கொங்கரப்பட்டி கிராமத்தில் தொன்று தொட்டு பயிர் செய்யப்பட்டு வருகிறது. எங்கள் தாத்தா நீலி அவுரி பயிர் செய்ததுமட்டுமல்லாமல் தொட்டிகட்டி பாடம் பண்ணி டை தயார் செய்து கொண்டிருந்தார். தாத்தாவிற்கு பிறகு என்னுடைய அப்பா திரு. அன்பழகன் அந்தத் தொழிலை மேற்கொண்டு வந்தார். அப்பா இந்தத் தொழிலை செய்ய ஆரம்பித்த பிறகு KMA Export என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைக் தொடங்கி அரசாங்கத்தில் பதிவு செய்துகொண்டார். எங்க ஃபேக்டரி திண்டிவனத்தில் இருந்து செஞ்சி போகும் வழியில் சுமார் 5 கிலோமீட்டரில் சந்தை மேடு என்ற கிராமத்தில் அமைந்திருக்கிறது. அப்பாவிற்கு பிறகு நானும் இந்தத் தொழிலையே செய்து வருகிறேன். நாங்கள் தயாரிக்கும் சுத்தமான தரம் வாய்ந்த சாயத்தை சுவிட்ஸர்லாந்து போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம். தற்பொழுது எங்களிடத்தில் நீலச்சாயம் தயார் செய்யும் நான்கு தொட்டிகள் உள்ளன"

"பொதுவாக எல்லாத் துணிகளுக்குமே விதவிதமான நிறங்களில் சாயக்கலர் ஏற்றித்தான் விற்பனை செய்வார்கள். செயற்கையில் தயாரிக்கப்படும் சாயத்தை துணிகளில் உபயோகப்படுத்தும்போது சரீரத்தில் ஒவ்வாமை வர வாய்ப்புள்ளது. சில நேரங்களில் தோல் நோய்களும் ஏற்படுவதுண்டு. நீல அவுரியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் **"இண்டிகோ 10"** என்ற நிறமி, மிக உயர்ந்த தரம் வாய்ந்ததாகும். இது இயற்கை முறையில் தயாரிக்கப்படுவதால் தோல் வியாதி வர வாய்ப்பில்லை. இண்டிகோ 10 சாயம் துணிகளை சாயம் ஏற்றுவதற்கு மட்டுமல்லாமல் ஹேர்டை அதாவது முடியை டை செய்யவும் பயன்படுகிறது"










Scanned by CamScanner









“இதைப் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் எங்களிடமே விதைகளை வாங்கிக் கொள்ளலாம். ஒரு ஏக்கர் பயிர் செய்ய 6 கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதையை ரூ 200 க்கு விற்பனை செய்கிறோம். இதைப் பயிர் செய்ய கார்த்திகை பட்டம் ஏற்றது. நிலத்தை உழுது புழுதிப் பதத்திற்கு கொண்டுவந்த பிறகு விதைக்க வேண்டும். நீலி அவுரி விதைகள் மிகச்சிறியவனவாக இருப்பதால், அப்படியே விதைக்கக் கூடாது. சரிபங்கு மணலுடன் கலந்து சீராகத் தூவி விதைக்க வேண்டும். விதைத்த பின் இழுப்புக்கட்டை வைத்து இழுத்து விதைகளை மூடி விட வேண்டும். கார்த்திகை மழைக்காலம் என்பதால் மழைத் தண்ணீரிலேயே விதைகள் முளைத்துவிடும். விதைத்த 90 வது நாளில், முதல் அறுவடை செய்துவிடலாம். தூரிலிருந்து ஒரு ஜாண் விட்டு முழுமையாக தண்டோடு இலைகளை அறுவடை செய்து களத்திற்குக் கொண்டு வந்துவிட வேண்டும். அதாவது, அறுத்த 2 மணி நேரத்தில் களத்தில் சேர்த்து காயவும்வைத்து விடவேண்டும். இல்லையெனில் இதில் உள்ள இரசாயனப் பொருளான “இண்டிகோ 10” முதிர்ச்சியடைந்து, பச்சை இலை நீல நிறமாக மாறிவிடும். நிறம் மாறிவிட்டால் எதற்கும் உபயோகப்படாது. முதல் அறுவடையில் 3 டன் மகசூலும் அதற்கு பிறகு 45 வது நாளில் 4 டன் மகசூலும் அடுத்து 45 வது நாளில் 3 ½ டன் மகசூலும் கிடைக்கும். இவ்வாறு அறுக்கப்பட்ட பச்சை இலைகளைக் காயவைக்கும் பொழுது எடை 10 யில் ஒரு பங்கு குறைந்துவிடும். அதாவது, அறுவடை செய்த 10 டன் பச்சை இலை காய்ந்த பிறகு ஒரு டன்னாக சுருங்கிவிடும். காய்ந்தபின் தண்டு, காம்புகளிலிருந்து இலைகள் உதிர்ந்துவிடுகின்றன. உதிர்ந்த இலைகளைக் களத்தில் சேகரித்து இயந்திரங்கள் மூலம் அவற்றை பக்குவமாக பொடியாக்கி பேக் செய்து ஏற்றுமதி செய்து வருகிறோம்”

“டை தயாரிப்பதற்கு, அறுவடை செய்த செடிகளை தொட்டிகளில் இட்டு 18 மணி நேரம் தண்ணீர்விட்டு ஊறவைத்த பிறகு சாயம் தொட்டியிலுள்ள தண்ணீரில் இறங்கிவிடும். இறங்கியபின் நீர் பச்சைநிறமாக இருக்கும். இந்தத் தண்ணீர்



Scanned by CamScanner

மற்றொரு தொட்டிக்கு மாற்றப்படுகிறது. மாற்றப்பட்ட தொட்டிக்குள் ஆட்கள் இறங்கி காலால் மிதிக்கும் பொழுது நீல நிறமிகள் தொட்டிகள் அடியில் படிய ஆரம்பிக்கின்றன. மேலே உள்ள நீர் வடிகட்டப்பட்டப்பின் எஞ்சியுள்ளதை கொதிக்கவைத்து "இண்டிகோ 10" நிறமி பிரித்தெடுக்கப்பட்டு கட்டிகளாக (Cake Form) வெட்டி எடுக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது"

**விவசாயிகள் திரு. அ. பாலசந்தர் அவர்களை, கைபேசி: 98949 49706 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.**



**"நீலி அவுரி பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் எங்களிடம் விதைகள் வாங்கிக் கொள்ளலாம். அறுவடை செய்த செடிகளை நாங்களே 1 கிலோ ரூபாய் 50 க்கு வாங்கிக் கொள்கிறோம். மானாவாரி நிலங்களில் ஒரு ஏக்கரில் ரூ 50,000 வரை 3 மாதங்களில் வருமானம் வரவாய்ப்பு உண்டு"**

Scanned by CamScanner